<u>சுருக்கம்</u>

<u>பொதுப்பணித் துறை – 2009 ஆம் ஆண்டு வடகிழக்கு பருவமழை துவங்குமுன் சென்னை பெருநகர நீர்வழி தடங்களில் கொட்டப்பட்டுள்ள குப்பை கூளங்கள், கழிவுகள் செடி கொடிகள் மற்றும் அனைத்து தடங்கல்களை அகற்றுவதற்காக ரூ.4.00 கோடி – நிருவாக ஒப்புதல் மற்றும் நிதி ஒப்பளிப்பு வழங்கி ஆணை – வெளியிடப்படுகிறது.</u>

---

பொதுப்பணி (கே.1) துறை

அரசாணை (நிலை) எண். 200 — நாள். 11. 09.2009

ஆவணி, 26

திருவள்ளுவர் ஆண்டு, 2040

படிக்கவும் :

தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத் துறை, பொதுப்பணித்துறை சென்னை மண்டலம் அவர்களின் கடித எண்.தொ.நு(2)/வெள்ளம்/2009, நாள் 23.6.2009 மற்றும் 10.9.2009.

<><><>

**<u>ஆணை :</u>**

சென்னை பெருநகரில் வரும் அக்டோபர் 2009 முதல் ஜனவரி 2010 வரை வடகிழக்கு பருவமழையும் அதனைச் சார்ந்து புயல் மழை பெய்யவும் வாய்ப்புள்ளது. அதனால் நகரில் உள்ள நீர்வழித் தடங்களை சார்ந்த தாழ்வான பகுதிகளில் வெள்ள நீர் புகுந்து சேதம் ஏற்படுத்தும் அபாயம் உள்ளது என்றும், எனவே இவ்விடர்களை குறைக்கும் பொருட்டு சென்னை பெருநகரில் உள்ள முக்கிய நீர்வழித் தடங்களான பக்கிங்காம் கால்வாய், கூவம், அடையாறு, ஓட்டேரி நல்லா, விருகம்பாக்கம்– அரும்பாக்கம் மற்றும் இத்துறை சார்ந்த இதர வடிகால்களில் உள்ள அனைத்து தடங்கல்களை அகற்றி வெள்ள நீர் விரைவாக வடியும் வகையில் பணிகள் மேற்கொள்வது அவசியமானது என்று மேலே படிக்கப்பட்ட கடிதத்தில் நீர்வள ஆதாரத் துறை, சென்னை மண்டல தலைமைப் பொறியாளர் தெரிவித்துள்ளார்.

2) மேலும், கடந்த 2005 ஆம் ஆண்டு ஏற்பட்ட வெள்ள இடர்பாடுகளின் போது ஏற்பட்ட அனுபவத்தின் அடிப்படையில் அதற்குப் பின் வருடா வருடம் வெள்ள காலங்களில் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதன்படி கடந்த 2006 ஆம் ஆண்டு ரூ.400 இலட்சத்திலும் 2007 ஆம் ஆண்டு ரூ.402.50 இலட்சத்திலும், 2008 ஆம் ஆண்டு ரூ. 405 இலட்சத்திலும் வெள்ள முன்னெச்சரிக்கை பணிகள் மேற்கொள்ளப்பட்டு வெள்ள சேதங்கள் வெகுவாக குறைக்கப்பட்டன என்றும் தெரிவித்துள்ளார்.

3) தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத் துறை, சென்னை மண்டலம் மேற்கண்ட நீர்வழித் தடங்களின் வருடாந்திர பராமரிப்பு பணிகள் செயல்படுத்தாத காரணத்தாலும், நீர்வழித் தடங்களில் உபயோகிப்பாளர்கள் மற்றும் பொதுமக்களால் கொட்டப்பட்டுள்ள குப்பை கூளங்கள், கழிவுகள் மற்றும் செடி கொடிகள் போன்றவற்றால்

நீர்வழித் தடங்களில் வெள்ள நீர் விரைவாக வடிய தடைகள் ஏற்பட்டுள்ளது என்று தெரிவித்து, வருகின்ற வெள்ள காலங்களில் இந்த தடைகளை அகற்றும் பொருட்டு கீழ்கண்ட 91 பணிகள் கண்டறியப்பட்டு ரூ.4,00,00,000/– செலவாகுமென மதிப்பிடப்பட்டுள்ளது என தெரிவித்துள்ளார்.

| வ. எண். | பணி விவரம் | மொத்த தொகை (ரூ இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | <u>ஆரணியாறு வடிநில கோட்டம் , சென்னை5</u><br>(52 பணிகள்)<br>அ) வடக்கு பக்கிங்காம் கால்வாய் (18 பணிகள்)<br>ஆ) மத்திய பக்கிங்காம் கால்வாய் (10 பணிகள்)<br>இ) தெற்கு பக்கிங்காம் கால்வாய் (10 பணிகள்)<br>ஈ) கூவம் ஆறு (2 பணிகள்)<br>உ) ஓட்டேரி நல்லா (6 பணிகள்)<br>ஊ) விருகம்பாக்கம்–அரும்பாக்கம் வடிகால் (6 பணிகள்) | <br><br>72.00<br>43.00<br>61.00<br>17.00<br>28.00<br>24.00 |
| 2. | கொசஸ்தலையாறு வடிநில கோட்டம், திருவள்ளூர் (32 பணிகள்) | 125.00 |
| 3. | கீழ்பாலாறு வடிநில கோட்டம், காஞ்சிபுரம் (5 பணிகள்) | 20.50 |
| 4. | கிருஷ்ணா குடிநீர் வழங்கு திட்ட கோட்டம் -VIII, சென்னை (2 பணிகள்) | 9.50 |
| | **மொத்தம்** | **400.00** |

4) தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத் துறை, சென்னை மண்டலம் அவர்கள் இப்பணிகள்யாவும் வடகிழக்கு பருவ மழை துவங்குவதற்கு முன்னர் பெருமளவில் நிறைவேற்றவும், பருவ மழையின் போது ஏற்படும் தடங்கல்களை அகற்றவும் திட்டமிடப்பட்டுள்ளதால் இவற்றிற்கு மிகவும் முன்னுரிமை கொடுத்து செப்டம்பர் 2009 இறுதிக்குள் செயல்படுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது என்றும், இப்பணிகள் நிறைவேற்றுவதால் குறிப்பாக சென்னை பெருநகர நீர்வழித் தடங்களை சார்ந்த தாழ்வான பகுதிகளில் ஏற்படும் பாதிப்பினை வெகுவாக குறைக்க இயலும் என தெரிவித்துள்ளார்.

5) எனவே, நீர்வள ஆதாரத் துறை, சென்னை மண்டல தலைமைப் பொறியாளர் அவர்கள் இவ்வாணையின் இணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள 91 பணிகளுக்கு ரூ.4,00,00,000/– அரசின் அனுமதியும், நிதி ஒதுக்கீடும் வழங்குமாறு கேட்டுக்கொண்டுள்ளார். மேலும், வெள்ள நிகழ்வு ஏற்படும் போது அதனைக் கையாளுவதற்கு கூடுதல் பணிகள் கண்டறியப்பட்டால் தேவைக்கேற்ப கூடுதல் கருத்துரு தனியே சமர்ப்பிக்கப்படும் எனவும் தெரிவித்துள்ளார்.

6) தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத் துறை, சென்னை மண்டலம் அவர்களின் கருத்துருவினை அரசு கவனமாக பரிசீலித்தது. இது போன்ற செலவினம் வருடாவருடம் தொடரும் செலவினமாக கருதக்கூடாது என்ற நிபந்தனையுடன்

அன்னாரின் செயற்குறிப்பினை எற்று, சென்னை பெருநகரில் வரும் அக்டோபர் 2009 முதல் ஜனவரி 2010 வரை வடகிழக்கு பருவமழைக்கு முன்பாக சென்னை பெருநகர நீர்வழி தடங்களில் கொட்டப்பட்டுள்ள குப்பைக் கூளங்கள், கழிவுகள் செடிகொடிகள் மற்றும் அனைத்து தடங்கல்களை அகற்ற இவ்வாணையின் இணைப்பு I மற்றும் IIல் குறிப்பிட்டுள்ள 91 பணிகளுக்கு ரூ.4,00,00,000/– (ரூபாய் நான்கு கோடி மட்டும்) நிர்வாக ஒப்புதல் மற்றும் நிதி ஒப்பளிப்பு அளித்து ஆணையிடப்படுகிறது.

7) மேலே பத்தி 6–இல் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள செலவினம் கீழ்கண்ட கணக்கு தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

"4711 – வெள்ளக் கட்டுப்பாட்டுத் திட்டம் குறித்த மூலதனச் செலவு –01. வெள்ளக் கட்டுப்பாடு –103. சிவில் பணிகள்–பதினொன்றாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள்–II மாநிலத் திட்டம்–KO சென்னை மாநகர நீர் வழிகளில் தூர்வாருதல், அகலப்படுத்துதல் மற்றும் வெள்ளப் பாதுகாப்பு அமைப்புகளைக் கட்டுதல்–16. பெரும் பணிகள்" (குதொகு : 4711-01-103-KO-1602)

8) மேலே, பத்தி 6–இல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட செலவினமான ரூ.4,00,00,000/– யினை திருத்திய / இறுதி திருத்திய மதிப்பீடு 2009–2010ல் ஒதுக்கீடு செய்யப்படும். இதனை எதிர்நோக்கி இச்செலவினத்தை மேற்கொள்ள முதன்மை தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத் துறை மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), சென்னை–5 அவர்களுக்கு அனுமதி அளிக்கப்படுகிறது. இச்செலவினத்தை, சட்டப் பேரவையின் ஒப்புதல் பெரும் பொருட்டு 2009–2010ம் ஆண்டிற்கான துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட வேண்டும்.

9. மேலும், 2009–2010 ஆம் அண்டிற்கான துணை மதிப்பீடுகளில், சேர்க்கும் பொருட்டு, உரிய விளக்கக் குறிப்புகளை நிதி (வசெ/பொப I)த்துறைக்கு தவறாமல் அனுப்புமாறு முதன்மைத் தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத்துறை மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது) அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

10) இவ்வாணை நிதித்துறையின் அ.சா.எண். 258/துசெ(VP)/ 2009, நாள்.11.9.2009 இல் பெற்ற இசைவுடன் மற்றும் இதற்கான கூடுதல் நிதி ஒதுக்க பேரேடு எண். 699 (அறுநூற்று தொன்னூற்று ஒன்பது) உடன் வெளியிடப்படுகிறது.

( ஆளுநரின் ஆணைப்படி )

சு.இராமசுந்தரம்,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
முதன்மை தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத் துறை மற்றும்
தலைமைப் பொறியாளர் (பொது), சென்னை–5.
தலைமைப் பொறியாளர், நீஆதுறை, சென்னை மண்டலம், சென்னை–5.
சம்பள கணக்கு அலுவலர்(கிழக்கு), சென்னை–5.
முதன்மை மாநில கணக்காயர், சென்னை–18.
<u>நகல் :</u>
மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் செயலாளர், சென்னை–9.

நிதி அமைச்சர் அவர்களின் நேர்முக உதவியாளர், சென்னை–9.
நிதி (பொப–II/BG-I/II)துறை, சென்னை–9.
இ.கோ/உ.நகல்

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்

**பொதுப்பணி(கே.1)த்துறை**

## இணைப்பு I

**அரசாணை (நிலை) எண். 200, பொதுப்பணித்துறை, நாள். 11.09.2009ன் இணைப்பு**

**2009–10 ஆம் ஆண்டுக்கான வெள்ள பாதுகாப்பு முன்னெச்சரிக்கை பணிகள்**

| வ. எண். | பணி விவரம் | மொத்த தொகை (ரூ இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | ஆரணியாறு வடிநில கோட்டம் , சென்னை5 (52 பணிகள்) | |
| | அ) வடக்கு பக்கிங்காம் கால்வாய் (18 பணிகள்) | 72.00 |
| | ஆ) மத்திய பக்கிங்காம் கால்வாய் (10 பணிகள்) | 43.00 |
| | இ) தெற்கு பக்கிங்காம் கால்வாய் (10 பணிகள்) | 61.00 |
| | ஈ) கூவம் ஆறு (2 பணிகள்) | 17.00 |
| | உ) ஓட்டேரி நல்லா (6 பணிகள்) | 28.00 |
| | ஊ) விருகம்பாக்கம்–அரும்பாக்கம் வடிகால் (6 பணிகள்) | 24.00 |
| 2. | கொசஸ்தலையாறு வடிநில கோட்டம், திருவள்ளூர் (32 பணிகள்) | 125.00 |
| 3. | கீழ்பாலாறு வடிநில கோட்டம், காஞ்சிபுரம் (5 பணிகள்) | 20.50 |
| 4. | கிருஷ்ணா குடிநீர் வழங்கு திட்ட கோட்டம் -VIII, சென்னை (2 பணிகள்) | 9.50 |
| | **மொத்தம்** | **400.00** |

சு.இராமசுந்தரம்,
அரசு முதன்மைச் செயலாளர்.

//உண்மை நகல்//

பிரிவு அலுவலர்

பொதுப்பணி(கே.1)த்துறை

**இணைப்பு II**

**அரசாணை (நிலை) எண். 200, பொதுப்பணித்துறை, நாள். 11. 09.2009ன் இணைப்பு**

| வ. எண் | வேலையின் விவரம் | மதிப்பீட்டு தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| I | ஆரணியாறு வடிநில கோட்டம், சென்னை—5 | |
| | **வடக்கு பக்கிங்காம் கால்வாய்** | |
| 1 | வடக்கு பக்கிங்காம் கால்வாய் சரகம் 0மீ முதல் 400மீ வரை உள்ள பாலங்களின் கண்வாய் பகுதிகளில் உள்ள மண்திட்டுகள், மிதக்கும் கழிவுகள், தூர்வாருதல் மற்றும் இதர தடங்கல்களை அகற்றும் பணி (கூவம் ஆறு கலக்குமிடம், பூந்தமல்லி சாலை வழியாக சென்ட்ரல் மற்றும் சென்னை பெருநகர ரயில் நிலையம் வரை) | 3.00 |
| 2 | வடக்கு பக்கிங்காம் கால்வாய் சரகம் 400மீ முதல் 1000மீ வரை உள்ள பாலங்களின் கண்வாய் பகுதிகளில் உள்ள மண்திட்டுகள், மிதக்கும் கழிவுகள், தூர்வாருதல் மற்றும் இதர தடங்கல்களை அகற்றும் பணி (சென்ட்ரல் பெருநகர் ரயில் நிலையம் வடபகுதி முதல் தெற்கு மராட்டா ரயில்வே பாலத்தின் தென்பகுதி வரை) | 5.00 |
| 3 | வடக்கு பக்கிங்காம் கால்வாய் சரகம் 1000மீ முதல் 1400மீ வரை உள்ள பாலங்களின் கண்வாய் பகுதிகளில் உள்ள மண்திட்டுகள், மிதக்கும் கழிவுகள், தூர்வாருதல் மற்றும் இதர தடங்கல்களை அகற்றும் பணி (தெற்கு மராட்டா ரயில்வே மேம்பாலம் தென் பகுதி முதல் யானைகவுனி சாலை பாலம் தென்பகுதி வரை) | 4.00 |
| 4 | வடக்கு பக்கிங்காம் கால்வாய் சரகம் 1400மீ முதல் 1900மீ வரை உள்ள பாலங்களின் கண்வாய் பகுதிகளில் உள்ள மண்திட்டுகள், மிதக்கும் கழிவுகள், தூர்வாருதல் மற்றும் இதர தடங்கல்களை அகற்றும் பணி (யானைகவுனி சாலை பாலம் தென் பகுதி முதல் பேசின் பாலம் தென் பகுதி வரை) | 4.00 |
| 5 | வடக்கு பக்கிங்காம் கால்வாய் சரகம் 1900மீ முதல் 2350மீ வரை உள்ள பாலங்களின் கண்வாய் பகுதிகளில் உள்ள மண்திட்டுகள், மிதக்கும் கழிவுகள், தூர்வாருதல் மற்றும் இதர தடங்கல்களை அகற்றும் பணி(யானைகவுனி ரோடு பாலம் தென் பகுதியில்) | 3.00 |
| 6 | வடக்கு பக்கிங்காம் கால்வாய் சரகம் 2350மீ முதல் 2740மீ வரை (பேசின் பாலம் தென்பகுதியில்) மண் திட்டுகள், மிதக்கும் கழிவுகள், தூர்வாருதல் மற்றும் இதர தடைகளை அகற்றும் பணி. | 4.00 |
| 7 | வடக்கு பக்கிங்காம் கால்வாய் சரகம் 2740மீ முதல் 2900 மீ வரை (பேசின் பாலம் தென்பகுதியில் மிதவை இயந்திரம் மூலம் மண் திட்டுகள், மிதக்கும் கழிவுகள், தூர்வாருதல், இதர தடைகள் மற்றும் பாலத்தின் கண்வாய் நீர்வழித் தடங்களின் அடைப்புகளை அகற்றும் பணி, தெற்கு ரயில்வே பாலம் தென்பகுதி வரை | 8.00 |
| 8 | வடக்கு பக்கிங்காம் கால்வாய் சரகம் 2900மீ முதல் 3050மீ வரை உள்ள பாலங்களின் கண்வாய் பகுதிகளில் உள்ள மண்திட்டுகள், மிதக்கும் கழிவுகள், தூர்வாருதல் மற்றும் இதர தடங்கல்களை அகற்றும் பணி (பேசின் மேம்பாலம் தென்பகுதி முதல் தெற்கு ரயில்வே பாலம் தென்பகுதி வரை) | 7.00 |

| | | |
|---|---|---|
| 9 | வடக்கு பக்கிங்காம் கால்வாய் சரகம் 3050மீ முதல் 3300மீ வரை உள்ள பாலங்களின் கண்வாய் மற்றும் மண்திட்டுகள், மிதக்கும் கழிவுகள், தூர்வாருதல் மற்றும் இதர தடங்கல்களை மிதவை இயந்திரம் மூலம் அகற்றும் பணி (தென் ரயில்வே பாலம் தென்பகுதி முதல் பெரம்பூர் – ராயபுரம் ரயில் பாலம் வடக்குப்பகுதி வரை) | 8.00 |
| 10 | வடக்கு பக்கிங்காம் கால்வாய் சரகம் 3300மீ முதல் 3500மீ வரை உள்ள பாலங்களின் கண்வாய் மற்றும் மண்திட்டுகள், மிதக்கும் கழிவுகள், தூர்வாருதல் மற்றும் இதர தடங்கல்களை மிதவை இயந்திரம் மூலம் அகற்றும் பணி(தென் ரயில்வே பாலம் முதல் பெரம்பூர் – ராயபுரம் ரயில் பாலம் வரை) | 8.00 |
| 11 | வடக்கு பக்கிங்காம் கால்வாய் சரகம் 3500மீ முதல் 4000மீ வரை உள்ள பாலங்களின் கண்வாய் மற்றும் மண்திட்டுகள், மிதக்கும் கழிவுகள், தூர்வாருதல் மற்றும் இதர தடங்கல்களை மிதவை இயந்திரம் மூலம் அகற்றும் பணி (பெரம்பூர் – ராயபுரம் ரயில் பாலம் வடக்குப்பகுதி முதல் மணலி சாலைபாலம் தென் பகுதி வரை) | 3.00 |
| 12 | வடக்கு பக்கிங்காம் கால்வாய் சரகம் 4000மீ முதல் 4500மீ வரை உள்ள பாலங்களின் கண்வாய் மற்றும் மண்திட்டுகள், மிதக்கும் கழிவுகள், தூர்வாருதல் மற்றும் இதர தடங்கல்களை மிதவை இயந்திரம் மூலம் அகற்றும் பணி (மணலி சாலைபாலம் தென் பகுதி) | 2.00 |
| 13 | வடக்கு பக்கிங்காம் கால்வாய் சரகம் 4500மீ முதல் 5130மீ வரை உள்ள பாலங்களின் கண்வாய் மற்றும் மண்திட்டுகள், மிதக்கும் கழிவுகள், தூர்வாருதல் மற்றும் இதர தடங்கல்களை மிதவை இயந்திரம் மூலம் அகற்றும் பணி (மணலி சாலைபாலம் தென் பகுதி) | 2.50 |
| 14 | வடக்கு பக்கிங்காம் கால்வாய் சரகம் 5130மீ முதல் 7020மீ வரை உள்ள பாலங்களின் கண்வாய் மற்றும் மண்திட்டுகள், மிதக்கும் கழிவுகள், தூர்வாருதல் மற்றும் இதர தடங்கல்களை அகற்றும் பணி (மணலி சாலைபாலம் வரை தென் பகுதி முதல் ஐ.ஓ.சி நடைபாலம் தென்பகுதி வரை) | 2.50 |
| 15 | வடக்கு பக்கிங்காம் கால்வாய் சரகம் 7020மீ முதல் 9300மீ வரை உள்ள பாலங்களின் கண்வாய் மற்றும் மண்திட்டுகள், மிதக்கும் கழிவுகள், தூர்வாருதல் மற்றும் இதர தடங்கல்களை அகற்றும் பணி (ஐ.ஓ.சி நடை பாலம் தென் பகுதி முதல் அடுத்த ஒரு ரயில்வே பாலம் தென்பகுதி வரை) | 2.00 |
| 16 | வடக்கு பக்கிங்காம் கால்வாய் சரகம் 9300மீ முதல் 12250மீ வரை உள்ள பாலங்களின் கண்வாய் மற்றும் மண்திட்டுகள், மிதக்கும் கழிவுகள், தூர்வாருதல் மற்றும் இதர தடங்கல்களை அகற்றும் பணி (ரயில்வே பாலம் தென் பகுதி முதல் சடையாங்குப்பம் நடைபாலம் தென் பகுதி வரை) | 2.00 |
| 17 | வடக்கு பக்கிங்காம் கால்வாய் சரகம் 12250மீ முதல் 14450மீ வரை உள்ள பாலங்களின் கண்வாய் மற்றும் மண்திட்டுகள், மிதக்கும் கழிவுகள், தூர்வாருதல் மற்றும் இதர தடங்கல்களை அகற்றும் பணி (சடையாங்குப்பம் நடைபாலம் தென் பகுதி முதல் ஈ.டி.பி.எஸ் சாம்பல் பாலம் தென் பகுதி வரை) | 2.00 |
| 18 | வடக்கு பக்கிங்காம் கால்வாய் சரகம் 14450மீ முதல் 17300மீ வரை உள்ள பாலங்களின் கண்வாய் மற்றும் மண்திட்டுகள், மிதக்கும் கழிவுகள், தூர்வாருதல் மற்றும் இதர தடங்கல்களை அகற்றும் பணி (ஈ.டி.பி.எஸ் சாம்பல் தென் பகுதி முதல் பாலம் எண்ணூர் முகத்துவாரம் வரை) | 2.00 |
| | மொத்தம் | 72.00 |

| | | |
|---|---|---|
| | **மத்திய பக்கிங்காம் கால்வாய்** | |
| **19** | மத்திய பக்கிங்காம் கால்வாய் சரகம் 0மீ முதல் 1300மீ வரை உள்ள பாலங்களின் கண்வாய் பகுதிகளில் உள்ள மண்திட்டுகள், மிதக்கும் கழிவுகள், தூர்வாருதல் மற்றும் இதர தடங்கல்களை அகற்றும் பணி (கூவம் ஆறு சேருமிடம் முதல் மாட்டான்குப்பம் தரைபாலம் வரை) | **4.00** |
| **20** | மத்திய பக்கிங்காம் கால்வாய் சரகம் 1300மீ முதல் 2700மீ வரை உள்ள பாலங்களின் கண்வாய் பகுதிகளில் உள்ள மண்திட்டுகள், மிதக்கும் கழிவுகள், தூர்வாருதல் மற்றும் இதர தடங்கல்களை அகற்றும் பணி ( டாக்டர் ராதா கிருஷ்ணன் சாலை பாலம் வடபகுதி வரை) | **4.00** |
| **21** | மத்திய பக்கிங்காம் கால்வாய் சரகம் 2700மீ முதல் 3300மீ வரை உள்ள பாலங்களின் கண்வாய் பகுதிகளில் உள்ள மண்திட்டுகள், மிதக்கும் கழிவுகள், தூர்வாருதல் மற்றும் இதர தடங்கல்களை அகற்றும் பணி (டாக்டர் ராதா கிருஷ்ணன் சாலை வடபகுதி முதல் இரட்டை வளைவு வடிகால் வரை) | **4.00** |
| **22** | மத்திய பக்கிங்காம் கால்வாய் சரகம் 3300மீ முதல் 3700மீ வரை உள்ள பாலங்களின் கண்வாய் பகுதிகளில் உள்ள மண்திட்டுகள், மிதக்கும் கழிவுகள், தூர்வாருதல் மற்றும் இதர தடங்கல்களை அகற்றும் பணி (இரட்டை வளைவு வடிகால் வடபகுதி முதல் ராமகிருஷ்ணா மடம் சாலை பாலம் பகுதி) | **5.00** |
| **23** | மத்திய பக்கிங்காம் கால்வாய் சரகம் 3700மீ முதல் 4150மீ வரை உள்ள பாலங்களின் கண்வாய் பகுதிகளில் உள்ள மண்திட்டுகள், மிதக்கும் கழிவுகள், தூர்வாருதல் மற்றும் இதர தடங்கல்களை மிதவை இயந்திரம் மூலம் அகற்றும் பணி (ராமகிருஷ்ணா மடம் சாலை பாலம் பகுதி) | **5.00** |
| **24** | மத்திய பக்கிங்காம் கால்வாய் சரகம் 4150மீ முதல் 4350மீ வரை உள்ள பாலங்களின் கண்வாய் பகுதிகளில் உள்ள மண்திட்டுகள், மிதக்கும் கழிவுகள், தூர்வாருதல் மற்றும் இதர தடங்கல்களை மிதவை இயந்திரம் மூலம் அகற்றும் பணி (ராமகிருஷ்ணா மடம் சாலை பாலம் வடபகுதி முதல் மைலாப்பூர் ரயில்வே நிலைய நடைபாலம் வரை) | **5.00** |
| **25** | மத்திய பக்கிங்காம் கால்வாய் சரகம் 4350மீ முதல் 5200மீ வரை உள்ள பாலங்களின் கண்வாய் பகுதிகளில் உள்ள மண்திட்டுகள், மிதக்கும் கழிவுகள், தூர்வாருதல் மற்றும் இதர தடங்கல்களை அகற்றும் பணி (மைலாப்பூர் ரயில்வே நிலைய நடைபாலம் வடபகுதி முதல் செயின்ட்மேரீஸ் சாலைபாலம் வரை) . | **4.00** |
| **26** | மத்திய பக்கிங்காம் கால்வாய் சரகம் 5200மீ முதல் 5900மீ வரை உள்ள பாலங்களின் கண்வாய் பகுதிகளில் உள்ள மண்திட்டுகள், மிதக்கும் கழிவுகள், தூர்வாருதல் மற்றும் இதர தடங்கல்களை அகற்றும் பணி (செயின்ட்மேரீஸ் சாலைபாலம் முதல் காமராஜர் சாலைபாலம் வரை) | **4.00** |
| **27** | மத்திய பக்கிங்காம் கால்வாய் சரகம் 5900மீ முதல் 6500மீ வரை உள்ள பாலங்களின் கண்வாய் பகுதிகளில் உள்ள மண்திட்டுகள், மிதக்கும் கழிவுகள், தூர்வாருதல் மற்றும் இதர தடங்கல்களை அகற்றும் பணி (காமராஜர் நடைபாலம் தென்பகுதி முதல் பசுமை வழிச் சாலைபாலம் வரை) . | **4.00** |
| **28** | மத்திய பக்கிங்காம் கால்வாய் சரகம் 6500மீ முதல் 7100மீ வரை உள்ள பாலங்களின் கண்வாய் பகுதிகளில் உள்ள மண்திட்டுகள், மிதக்கும் கழிவுகள், தூர்வாருதல் மற்றும் இதர தடங்கல்களை அகற்றும் பணி (பசுமை வழிச் சாலைபாலம் முதல் அடையாறு வடபகுதி திறவு பாலம் வரை) . | **4.00** |
| | **மொத்தம்** | **43.00** |

| | | |
|---|---|---|
| | **தெற்கு பக்கிங்காம் கால்வாய்** | |
| **29** | தெற்கு பக்கிங்காம் கால்வாய் சரகம் 0மீ முதல் 1200மீ வரை உள்ள பாலங்களின் கண்வாய் பகுதிகளில் உள்ள மண்திட்டுகள், மிதக்கும் கழிவுகள், தூர்வாருதல் மற்றும் இதர தடங்கல்களை அகற்றும் பணி (அடையாறு தெற்கு திறவு பாலம் முதல் சர்தார்படேல் சாலை பாலம் வடபகுதி வரை) . | **9.00** |
| **30** | தெற்கு பக்கிங்காம் கால்வாய் சரகம் 1200மீ முதல் 2200மீ வரை உள்ள பாலங்களின் கண்வாய் பகுதிகளில் உள்ள மண்திட்டுகள், மிதக்கும் கழிவுகள், தூர்வாருதல் மற்றும் இதர தடங்கல்களை அகற்றும் பணி (சர்தார்படேல் சாலை பாலம் வடபகுதி முதல் இந்திரா நகர் ரயில் நிலையம் வடபகுதி வரை) . | **7.00** |
| **31** | தெற்கு பக்கிங்காம் கால்வாய் சரகம் 2200மீ முதல் 3350மீ வரை உள்ள பாலங்களின் கண்வாய் பகுதிகளில் உள்ள மண்திட்டுகள், மிதக்கும் கழிவுகள், தூர்வாருதல் மற்றும் இதர தடங்கல்களை அகற்றும் பணி (இந்திரா நகர் ரயில் நிலையம் வடபகுதி முதல் திருவான்மியூர் சாலை பாலம் வடபகுதி வரை) . | **7.50** |
| **32** | தெற்கு பக்கிங்காம் கால்வாய் சரகம் 3350மீ முதல் 5510 மீ வரை (திருவான்மியூர் சாலைப்பாலம் வடக்கு பகுதி முதல் கொட்டிவாக்கம் வடபகுதி சாலைப்பாலம் வரை) சாலைப்பால கண்வாயில் உள்ள மண்திட்டுகள், மிதக்கும் கழிவுகள், தூர்வாருதல், இதர தடைகள் அகற்றும் பணி. | **6.50** |
| **33** | தெற்கு பக்கிங்காம் கால்வாய் சரகம் 5510 மீ முதல் 7665 மீ வரை (கொட்டிவாக்கம் சாலைப் பாலம் வடபகுதி முதல் நீலாங்கரை நடைபாலம் வடபகுதி வரை) சாலைப்பால கண்வாயில் உள்ள மண்திட்டுகள், மிதக்கும் கழிவுகள், தூர்வாருதல், இதர தடைகள் அகற்றும் பணி. | **6.00** |
| **34** | தெற்கு பக்கிங்காம் கால்வாய் சரகம் 7665மீ முதல் 10500மீ வரை உள்ள பாலங்களின் கண்வாய் பகுதிகளில் உள்ள மண்திட்டுகள், மிதக்கும் கழிவுகள், தூர்வாருதல் மற்றும் இதர தடங்கல்களை அகற்றும் பணி (நீலாங்கரை நடைபாலம் வடபகுதி முதல் ஒக்கியம்மடுவு தென்பகுதி வரை) . | **5.00** |
| **35** | தெற்கு பக்கிங்காம் கால்வாய் சரகம் 10500மீ முதல் 13300மீ வரை உள்ள பாலங்களின் கண்வாய் பகுதிகளில் உள்ள மண்திட்டுகள், மிதக்கும் கழிவுகள், தூர்வாருதல் மற்றும் இதர தடங்கல்களை அகற்றும் பணி (ஒக்கியம்மடுவு தென்பகுதி முதல் சோளிங்கநல்லூர் சாலைபாலம் தென்பகுதி வரை) | **5.00** |
| **36** | 2009–ம் ஆண்டு பருவ மழை காலத்தில் முட்டுக்காடு முகத்து வாரத்தை வெட்டி எடுத்தல் (சரகம் ஒன்று 0 மீ முதல் 50 மீ வரை) | **5.00** |
| **37** | 2009–ம் ஆண்டு பருவ மழை காலத்தை எதிர்நோக்கி முட்டுக்காடு முகத்து வாரத்தை வெட்டி எடுத்தல் ( இரண்டாம் சரகம் 50மீ முதல் 100 மீ வரை) | **5.00** |
| **38** | 2009–ம் ஆண்டு பருவ மழை காலத்தை எதிர்நோக்கி ஒய்யாளி குப்பம் முகத்து வாரத்தை வெட்டி எடுத்தல். | **5.00** |
| | **மொத்தம்** | **61.00** |
| | **கூவம் ஆறு** | |
| **39** | கூவம் ஆறு சரகம் ஒன்று 15390மீ முதல் 14740 மீ வரை உள்ள தடங்கல்கள், நீர் தாவரங்கள் மற்றும் அடைப்புகளை மிதவை இயந்திரம் மூலம் அகற்றுதல் | **9.00** |

| | | |
|---|---|---|
| 40 | கூவம் ஆறு சரகம் இரண்டு 15940 மீ முதல் 15390 மீ வரை உள்ள தடங்கல்கள், செடிகொடிகள் மற்றும் அடைப்புகளை மிதவை இயந்திரம் மூலம் அகற்றுதல் | 8.00 |
| | **மொத்தம்** | **17.00** |
| | **ஓட்டேரி நல்லா** | |
| 41 | ஓட்டேரி நல்லாவில் இருந்து செல்லும் பிரிவு வாய்க்கால் முதல் சத்யா நகர் பாலம் வரை உள்ள தடங்கல்கள், செடிகொடிகள் மற்றும் அடைப்புகள் அகற்றும் பணி (சரகம் 500மீ முதல் 3455மீ வரை) | 5.00 |
| 42 | ஓட்டேரி நல்லாவின் சத்யா நகர் பாலம் முதல் புது ஆவடி சாலைப் பாலம் வரை உள்ள தடங்கல்கள், செடிகொடிகள் மற்றும் அடைப்புகள் அகற்றும் பணி (சரகம் 3455மீ முதல் 5345மீ வரை) | 5.00 |
| 43 | ஓட்டேரி நல்லாவின் புது ஆவடி சாலைப் பாலம் முதல் சேமிப்பு கிடங்கு பாலம் வரை உள்ள தடங்கல்கள், செடிகொடிகள் மற்றும் அடைப்புகள் அகற்றும் பணி (சரகம் 5345மீ முதல் 7490மீ வரை) | 5.00 |
| 44 | ஓட்டேரி நல்லாவின் சேமிப்புக் கிடங்கு சாலைப்பாலம் முதல் ஸ்டீபன்சன் சாலைப்பாலம் வரை உள்ள தடங்கல்கள், செடிகொடிகள் மற்றும் அடைப்புகள் அகற்றும் பணி (சரகம் 7490மீ முதல் 9095மீ வரை) | 5.00 |
| 45 | ஓட்டேரி நல்லாவின் ஸ்டீபன்சன் சாலைப்பாலம் முதல் நெல்லூார் நெடுஞ்சாலை சாலைப்பாலம் வரை உள்ள தடங்கல்கள், செடிகொடிகள் மற்றும் அடைப்புகள் அகற்றும் பணி (சரகம் 9095மீ முதல் 10640மீ வரை) | 4.00 |
| 46 | ஓட்டேரி நல்லாவின் நெல்லூார் நெடுஞ்சாலை சாலைப்பாலம் முதல் கூடுதுறை வரை உள்ள தடங்கல்கள், செடிகொடிகள் மற்றும் அடைப்புகள் அகற்றும் பணி (சரகம் 10640மீ முதல் 10840மீ வரை) | 4.00 |
| | **மொத்தம்** | **28.00** |
| | **விருகம்பாக்கம்–அரும்பாக்கம் வடிகால்** | |
| 47 | விருகம்பாக்கம்–அரும்பாக்கம் வடிகாலில் உள்ள தடங்கல்கள், மற்றும் நீர் தாவரங்களை அகற்றும் பணி (சரகம் 0மீ முதல் 1500மீ வரை) | 4.50 |
| 48 | விருகம்பாக்கம்–அரும்பாக்கம் வடிகாலில் உள்ள தடங்கல்கள், மற்றும் நீர் தாவரங்களை அகற்றும் பணி (சரகம் 1500மீ முதல் 2700மீ வரை) | 4.00 |
| 49 | விருகம்பாக்கம்–அரும்பாக்கம் வடிகாலில் உள்ள தடங்கல்கள், மற்றும் நீர் தாவரங்களை அகற்றும் பணி (சரகம் 2700மீ முதல் 3400மீ வரை) | 4.00 |
| 50 | விருகம்பாக்கம்–அரும்பாக்கம் வடிகாலில் உள்ள தடங்கல்கள், மற்றும் நீர் தாவரங்களை அகற்றும் பணி (சரகம் 3400மீ முதல் 4000மீ வரை) | 4.50 |
| 51 | விருகம்பாக்கம்–அரும்பாக்கம் வடிகாலில் உள்ள தடங்கல்கள், மற்றும் நீர் தாவரங்களை அகற்றும் பணி (சரகம் 4000மீ முதல் 5100மீ வரை) | 3.50 |
| 52 | விருகம்பாக்கம்–அரும்பாக்கம் வடிகாலில் உள்ள தடங்கல்கள், மற்றும் நீர் தாவரங்களை அகற்றும் பணி (சரகம் 5100மீ முதல் 6360மீ வரை) | 3.50 |
| | **மொத்தம்** | **24.00** |
| | **கொசஸ்தலையாறு வடிநில கோட்டம், திருவள்ளூர்** | |
| 1 | காஞ்சிபுரம் மாவட்டம் போரூர் ஏரி மிகை நீர் கால்வாயில் கால்வாயில் உள்ள மண்திட்டுகள் தடைகள் அகற்றும் பணி தொலைக்கல் 0 மீ முதல் 3000மீ வரை | 4.50 |
| 2 | காஞ்சிபுரம் மாவட்டம் போரூர் ஏரி மிகை நீர் கால்வாயின் கால்வாயில் உள்ள மண் திட்டுகள் தடைகள் அகற்றும் பணி தொலைக்கல் 3000மீ முதல் 6600மீ வரை அமைக்கும் பணி | 4.00 |
| 3 | கோலபாக்கம், கெருகம்பாக்கம் வாய்காலில் மண்திட்டுகள், மற்றும் இதர தடைகளை அகற்றும் பணி | 4.50 |
| 4 | திருவள்ளூர் மாவட்டம் போரூர் ஏரி 0மீ முதல் 1600மீ வரை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட கரையை சீரமைக்கும் பணி | 4.50 |

| | | |
|---|---|---|
| 5 | காஞ்சிபுரம் மாவட்டம் போரூர் ஏரி 1600மீ முதல் 2900மீ வரை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட கரையை சீரமைக்கும் பணி | 3.50 |
| 6 | சென்னை மாவட்டம், அடையாறு ஆற்றில் உள்ள ஜாபர்கான்பேட் தரைப்பாலம் பகுதியில் உள்ள மண்திட்டுகள் தடைகளை மற்றும் நீர் தாவரங்களை அகற்றி சுத்தப்படுத்தும் பணி. | 4.40 |
| 7 | திருவள்ளூர் மாவட்டம், இராமாபுரம் கால்வாயில் உள்ள மண்திட்டுகள் மற்றும் இதர தடைகளை அகற்றும் பணி. | 4.20 |
| 8 | திருவள்ளூர் மாவட்டம், மதுரவாயல் மற்றும் வானகரம் கால்வாயில் உள்ள கழிவுகள் மற்றும் இதர கடைகளை அகற்றும் பணி. | 3.00 |
| 9 | காஞ்சிபுரம் மாவட்டம், வரதராஜபுரம் கிராமம் அருகே உள்ள அடையாறு ஆற்றில் தொலைக்கல் 32350மீ முதல் 30650மீ வரை மண்திட்டுகள் மற்றும் தடைகளை அகற்றும் பணி. | 2.60 |
| 10 | காஞ்சிபுரம் மாவட்டம், வரதராஜபுரம் கிராமம் அருகே உள்ள அடையாறு ஆற்றில் தொலைக்கல் 33850மீ முதல் 32350மீ வரை மண்திட்டுகள் மற்றும் தடைகளை அகற்றும் பணி. | 2.50 |
| 11 | காஞ்சிபுரம் மாவட்டம், வரதராஜபுரம் கிராமம் அருகே உள்ள அடையாறு ஆற்றில் தொலைக்கல் 35450மீ முதல் 33850மீ வரை மண்திட்டுகள் மற்றும் தடைகளை அகற்றும் பணி. | 2.35 |
| 12 | கூவம் ஆறு பருத்திப்பட்டு தடுப்பணை அருகே வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட கரையை சரி செய்து தடைகளை அகற்றும் பணி | 4.50 |
| 13 | அடையாறு நந்தம்பாக்கம் பாலம் அருகே மண்திட்டுகள் இதர தடைகளை மற்றும் நீர் தாவரங்களை அகற்றும் பணி | 4.20 |
| 14 | கூவம் ஆறு ரயில் நகர் தரை பாலம் அருகே நீர் தாவரங்கள் மற்றும் தடைகளை அகற்றும் பணி | 4.00 |
| 15 | அடையாற்றில் முக்கிய இடங்களில் வெள்ள தடுப்பு பணிகளுக்காக மணல் மூட்டைகள் தருவித்து சேமித்து வைத்தல் | 3.00 |
| 16 | அம்பத்தூர் ஏரி இரண்டாம் எண் கலிங்கலிருந்து சிட்கோ எல்லை வரை வாய்காலில் சகதிகள், மற்றும் கழிவுகளை அகற்றும் பணி | 4.50 |
| 17 | அம்பத்தூர் ஏரி முதலாம் எண் கலிங்கலிருந்து சிட்கோ எல்லை உபரி நீர் வாய்கால் வரை உள்ள கழிவுகளை மற்றும் தடைகளை அகற்றும் பணி | 4.50 |
| 18 | அம்பத்துூர் ஏரி உபரி நீர் வாய்காலில் சகதிகள் மற்றும் கழிவுகளை அகற்றும் பணி | 4.50 |
| 19 | திருவள்ளூர் மாவட்டம், அம்பத்தூர் வட்டம், ( சிட்கோ தொழில் வளாகம் ரயில்வே பாதை முதல் பட்டரவாக்கம் கொரட்டூர் ஏரி வடபகுதி பட்டரவாக்கம் இருப்பு பாதை வடபகுதி வரை) கால்வாயில் சேற்று படிவு சகதி மற்றும் குப்பை கழிவுகள் முதலியவற்றை அகற்றும் பணி. | 4.50 |
| 20 | திருவள்ளூர் மாவட்டம், அம்பத்தூர் வட்டம், ( சிட்கோ தொழில் வளாகம் ரயில்வே பாதை முதல் கொரட்டூர் ஏரி வடபகுதி பட்டரவாக்கம் இருப்பு பாதை தென்பகுதி வரை) கால்வாயில் சேற்று படிவு சகதி மற்றும் குப்பை கழிவுகள் முதலியவற்றை அகற்றும் பணி. | 2.50 |
| 21 | திருவள்ளூர் மாவட்டம், தணிகாசலம் நகர் வடிகால் தொலைக்கல் 0 மீட்டர் முதல் 2000மீட்டர் வரை சேற்று படிவு சகதி மற்றும் குப்பை கழிவுகள் முதலியவற்றை அகற்றும் பணி. | 4.80 |
| 22 | திருவள்ளூர் மாவட்டம், தணிகாசலம் நகர் வடிகால் தொலைக்கல் 2000 மீட்டர் முதல் 3074 மீட்டர் வரை மற்றும் கொடுங்கையூர் வடிகால் தொலைக்கல் 400 மீ வரை சேற்று படிவு சகதி மற்றும் குப்பை கழிவுகள் முதலியவற்றை அகற்றும் பணி. | 2.85 |

| | | |
|---|---|---|
| 23 | திருவள்ளூர் மாவட்டம், அம்பத்தூர் வட்டம், கொரட்டூர் ஏரி மிகை நீர் கால்வாய் முதல் கதிர்வேடு தாங்கல், கீழ் புறம் பகுதி மற்றும் மாதவரம் ஏரி முகப்பு வரை சேற்று படிவு சகதி மற்றும் குப்பை கழிவுகள் முதலியவற்றை அகற்றும் பணி. | 4.75 |
| 24 | திருவள்ளூர் மாவட்டம், அம்பத்தூர் ஏரியில் அயப்பாக்கம் சாலை அருகே 0மீ முதல் 700மீ வரை சகதிகள் மற்றும் குப்பை கழிவுகள் அகற்றும் பணி | 2.90 |
| 25 | திருவள்ளூர் மாவட்டம், அம்பத்தூர் ஏரியில் அயப்பாக்கம் சாலை அருகே 700மீ முதல் 1400மீ வரை சகதிகள் மற்றும் குப்பை கழிவுகள் அகற்றும் பணி | 4.95 |
| 26 | அம்பத்துார் ஏரியில் 2 ம் எண் கலிங்கின் அணுகு வாய்காலில் சகதிகள் மற்றும் இதர கழிவுகளை அகற்றும் பணி | 4.85 |
| 27 | கொரட்டுர் ஏரியில் வலது புறக் கரையில் ஆவின் சாலைப்பாலத்தில் கூடுதல் குழாய்கள் அமைத்து தண்ணிர் வடிய வைக்கும் பணி | 5.00 |
| 28 | கொரட்டூர் ஏரியில் முன் பகுதியில் உள்ள சகதிகள் மற்றும் கழிவுகளை அகற்றும் பணி | 2.65 |
| 29 | திருப்பெரும்புதுார் வட்டம் செம்பரம்பாக்கம் ஏரி மணப்பாக்கம் வாய்க்காலில் 0மீ முதல் 4000மீ வரை சகதிகள் அகற்றும் பணி | 4.50 |
| 30 | திருப்பெரும்புதுார் வட்டம் செம்பரம்பாக்கம் ஏரி நத்தம் வாய்க்காலில் 0மீ முதல் 3000மீ வரை சகதிகள் அகற்றும் பணி | 3.50 |
| 31 | திருப்பெரும்புதுார் வட்டம் செம்பரம்பாக்கம் ஏரி தந்திகால் வாய்க்காலில் 0மீ முதல் 4000மீ வரை சகதிகள் அகற்றும் பணி | 4.00 |
| 32 | திருப்பெரும்புதுார் வட்டம் செம்பரம்பாக்கம் ஏரி குன்றத்துார் கால்வாயில் உள்ள சகதிகள் மற்றும் இதர தடைகளை 0மீ முதல் 3000மீ வரை அகற்றும் பணி | 4.50 |
| | **மொத்தம்** | **125.50** |
| | **கீழ்பாலாறு வடிநில கோட்டம், காஞ்சிபுரம்** | |
| 1 | காஞ்சிபுரம் மாவட்டம், தாம்பரம் வட்டம், வேளச்சேரி ஏரி மற்றும் வடிகாலில் உள்ள மதகு பகுதியில் உள்ள செடிகொடிகள் மற்றும் கழிவுகள் அகற்றும் பணி. | 4.00 |
| 2 | வேளச்சேரி வடிகால் கால்வாய் மற்றும் பள்ளிக்கரணை கழி வெளிப்பகுதிகளை இணைக்கும் கால்வாய் உள்ள செடிகொடிகள் அகற்றுதல் மற்றும் தூர்வாருதல்<br>(3 கண் பாலம் மேற்புறம் மற்றும் கிழ் புறம் வேளச்சேரி தாம்பரம் சாலையில் உள்ள 5 கண் பாலம் வரை) | 5.00 |
| 3 | தாம்பரம் வேளச்சேரி சாலை, வட்டசாலை மற்றும் கழிவெளியின் வடபகுதியிலிருந்து தென்பகுதி வரை தடங்கள் இன்றி நீர் செல்லவும், பருவ மழை முன்னெச்சரிக்கை தடுப்பு பணியான பள்ளிக்கரணை கழிவெளியில் உள்ள செடிகொடிகள் அகற்றுதல், சிறுபாலப் பகுதிகளில் தூர்வாரும் பணி. | 5.00 |
| 4 | பருவமழை முன் எச்சரிக்கை பணியாக பழைய மகாபலிபுரம் சாலையில் ஒக்கியம் மடுவு பாலம் வரை கால்வாய் உள்ள செடிகொடிகள் அகற்றுதல் மற்றும் தூர்வாருதல் பணி. | 2.00 |
| 5 | கீழ்கட்டளை ஏரியின் உபரிநீர் கால்வாயில் மடிப்பாக்கம் சாலைபாலம் முதல் வேளச்சேரி –தாம்பரம் சாலை அருகில் உள்ள பாலம் வரை உள்ளிருக்கும் அடைப்புகளை அகற்றும் பணி. | 4.00 |
| | **மொத்தம்** | **20.00** |

| | | |
|---|---|---|
| | **கிருஷ்ணா குடிநீர் வழங்கு திட்ட கோட்டம்–8, சென்னை** | |
| **1** | ஆலந்தூர் நகராட்சி எல்லை முதல் வேளச்சேரி வடபகுதியின் உள்வட்ட சாலையில் உள்ள வீராங்கால் ஓடைக்கு தற்காலிக வடிகால் அமைக்கும் பணி. | **5.00** |
| **2** | ஆலந்தூர் நகராட்சி எல்லை முதல் வேளச்சேரி தென்பகுதியின் உள்வட்ட சாலையில் உள்ள சென்னை பெருநகர துரித இரயில் 3 கண் பாலம் வரை வீராங்கால் ஓடைக்கு தற்காலிக வடிகால் அமைக்கும் பணி. | **4.50** |
| | **மொத்தம்** | **9.50** |

சு.இராமசுந்தரம்,
அரசு முதன்மைச் செயலாளர்.

**// உண்மை நகல்//**

**பிரிவு அலுவலர்**